# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 65/மா/2022**
**நாள் : 20.06.2022**

திரு. J. சோமன்,
சென்னை– 62. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, திருமுல்லைவாயல், சரஸ்வதி நகர், 8-வது தெரு, பிளாட் எண்.340 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. சோமன் என்பவரின் 17.5.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.5.2022-ல் பெறப்பட்டு, 65/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, திருமுல்லைவாயல், சரஸ்வதி நகர், 8-வது தெரு, பிளாட் எண்.340 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. சோமன் என்பவரின் 17.5.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் :

> "நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். சென்னை – 600 062, திருமுல்லைவாயில், சரஸ்வதி நகர் 8-வது தெரு, பிளாட் எண்.341-ல் வசித்து வரும் திரு. காந்தி அவர்களின் மனைவி திருமதி. சுகுணா என்பவர் தன்னுடைய பிளாட் எண்.341-க்கு முன்புறமாக நீளம் 40 அடி, சுமார் அகலம் 10 அடி கொண்ட சரஸ்வதி நகர் 8-வது தெருவில் உள்ள பொது பாதையை தன்னுடைய பிளாட்டுடன் சேர்த்து மதில் சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இதனால், 8-வது தெருவில் பொது மக்கள் போக வர, வண்டிகள் ஓட்டிச் செல்ல இடையூறாக உள்ளது. மேலும், மழை நீர் வடிந்து செல்ல, கழிவு நீர் செல்ல முடியாமல் தடுத்து மதில்கள் கட்டியுள்ளார். ஆகவே, தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று புகார் அளித்துள்ளார்.

2) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 14.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) முறையீட்டு மனுதாரர் 14.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி, அளித்த தனது வாக்குமூலத்தில்,

> "சென்னை, ஆவடி, திருமுல்லைவாயல் சரஸ்வதி நகர் 8வது தெருவில் எங்களது பக்கத்து பிளாட் எண்.341-இல் வசித்து வரும் திரு. காந்தி என்பவரின் மனைவி திருமதி

சுகுணா என்பவர் தன்னுடைய பிளாட்டு முன்புறம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை ஆக்கிரமிப்பு செய்து, தனது இடத்துடன் சேர்த்து மதில் சுவர் கட்டியுள்ளார். இதனால் பாதாள சாக்கடை திட்டத்தை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மேல் நிறைவேற்றப்படாமலும் குடிநீர் குழாய் பதிக்க முடியாமலும், மேலும் அங்கு தேங்கும் நீர் வெளியேற வழியில்லாமலும் உள்ளது. மேலும், சாலை ஆக்கிரமிப்பின் காரணமாக பொதுமக்கள் போக வர, வண்டிகள் ஓட்டிச் செல்ல மிகவும் இடையூறாக உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட பொதுப்பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள மதில் சுவரை அகற்றுவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்," என்று தெரிவித்துள்ளார்.

4) ஆவடி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் 14.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி அளித்த தனது வாக்குமூலத்தில்,

"சென்னை ஆவடி திருமுல்லைவாயல் சரஸ்வதி நகர் 8வது தெருவில் பிளாட் எண்.341ல் வசிக்கும் திருமதி. சுகுணா என்பவர் தனது பிளாட்டுக்கு முன்புறம் உள்ள சாலையில் ஆக்கிரமிப்பு செய்து சுவர் எழுப்பியுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் குறித்து மாநகராட்சியில் உள்ள சாலைப் பதிவேட்டினை ஆய்வு செய்து, மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து மதில் சுவர் கட்டப்பட்டிருந்தால், உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட சுவரை இன்னும் ஒருமாத காலத்தில் அகற்றப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

சென்னை, ஆவடி, திருமுல்லைவாயல் சரஸ்வதி நகர் 8வது தெரு பிளாட் எண்.340ல் மனுதாரர் திரு. சோமன், தனது பக்கத்து வீட்டுக்காரரான பிளாட் எண்.341-ல் வசிக்கும் திரு. காந்தி என்பவரின் மனைவி திருமதி. சுகுணா தன்னுடைய பிளாட் முன்புறம் ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து மதில் சுவர் கட்டியுள்ளதால், பாதாள சாக்கடை திட்டம் சரிவர நிறைவேற்றப்படாமலும், குடிநீர் குழாய் பதிக்க முடியாமல் உள்ளதாகவும், அங்கு தேங்கும் நீர் வெளியேற வழியில்லாமலும் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், பொது மக்கள் சென்று வரவும், வண்டிகள் ஓட்டிச் செல்ல இடையூறாக உள்ளதாகவும் தெரிவித்து பொதுப்பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள சுவரை அகற்றுமாறு கோரியுள்ளார்.

ஆவடி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர், மனுதாரரின் குடியிருப்புப் பகுதிக்கு நேரில் சென்று தல விசாரணை மேற்கொண்டதில் மனுதாரர் வசிக்கும் குடியிருப்புப் பகுதி முழுவதும் முன்னாள் ஆவடி நகராட்சியாலும், தற்போதைய ஆவடி மாநகராட்சியாலும் அங்கீகரிக்கப்படாத குடியிருப்புப் பகுதியாகும் என்றும், இருப்பினும், சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆவடி மாநகராட்சியால் சொத்துவரி வசூலிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், அங்கீகரிக்கப்படாத குடியிருப்புப் பகுதி என்பதால், கட்டட வரைபட திட்ட அனுமதி எதுவும் மாநகராட்சியால் அளிக்கப்படவில்லை என்றும், எனினும், சாலைப்பதிவேட்டினை சரிபார்த்து, சாலையின் நீள அகலம் போன்ற விவரங்கள் சேகரித்து, மாநகராட்சியால் போடப்பட்ட கான்கிரீட் சாலையை திருமதி. சுகுணா என்பவர் ஆக்கிரமிப்பு செய்து மதில் சுவர் கட்டியிருந்தால், இன்னும் ஒரு மாத காலத்தில் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

விரிவான விசாரணைக்குப்பின் இந்நேர்வில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

ஆவடி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் விசாரணையின் போது உறுதியளித்தபடி, சாலைப் பதிவேட்டினை சரிபார்த்து, மனுதாரர் திரு. சோமன் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளது போல் சாலையை ஆக்கிரமித்து மதில் சுவர் கட்டப்பட்டிருந்தால், உரிய சட்ட விதிமுறைகளை மேற்கொண்டு, ஒரு மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது குறித்தான அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்துக்கு அனுப்புமாறும் உத்தரவிடப்படுகிறது.

மேலும், ஆவடி மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை மாநகராட்சியில் உள்ள நில வரைபடங்கள் மற்றும் பதிவேடுகளின்படி சரிபார்த்து அவ்வாறு நில வரைபடங்கள், பதிவேடுகள் எதுவும் சரிவர கிடைக்கப்படாத நிலையில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிடமிருந்து பெற்று அவ்விடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்தால், உரிய சட்ட விதிமுறைகளை மேற்கொண்டு அவற்றை அகற்ற சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு எச்சரிக்கை விடுக்கவேண்டும் எனவும், அவ்வாறு ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் நடைமுறையில் உள்ள உரிய சட்ட விதிகளின்படி துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்து சுற்றறிக்கை அனுப்பவேண்டும் என்றும் ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. J. சோமன்,
த/பெ. ஜேக்கப்,
பிளாட் எண்.340, 8-வது தெரு,
சரஸ்வதி நகர், திருமுல்லைவாயல், சென்னை– 600 062.

2) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி.

3) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.